අධ්‍යාපන සමුපකාර සමිතිය
கல்வி கூட்டுறவுச் சங்கம்
Education Co-operative Society

# பாதுகாப்புச் சேவை விடயங்களுக்கான கேள்விக் கோரல்

வ/ப கல்விச் சேவை ஊழியர்களின் கூட்டுறவு சிக்கனம் மற்றும் கடன் வழங்கும் சங்கத்தின் கொள்ளுப்பிட்டியவில் அமைந்துள்ள பிரதான அலுவலகம், 26 மாவட்டம் மற்றும் வலய அலுவலகங்கள், கதிர்காமம் ஓய்வு மண்டபம், கண்டி கட்டடம், அநுராதபுரம் விடுமுறை இல்லம், நுவரெலியா விடுமுறை இல்லம் மற்றும் மஹரகம விஜேராமவில் அமைந்துள்ள காணிக்கு பாதுகாப்புச் சேவைகளை நடத்திச்செல்வதற்காக கீழ் குறிப்பிடப்பட்ட தகைமையுள்ள நிறுவனங்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

2. விலைமனுக்கள் சமர்ப்பிக்கும் நிறுவனம் பாதுகாப்புச் சேவை வழங்கும் நிறுவனமொன்றாக பாதுகாப்பு அமைச்சின் கீழ் பதிவுசெய்துள்ள சட்டரீதியான நிறுவனமொன்றாக இருத்தல் வேண்டும்.

3. அவ்வாறே அரசாங்க அமைச்சு, திணைக்களம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களுக்கு பாதுகாப்புச் சேவைகள் வழங்குவது தொடர்பாக் குறைந்தபட்சம் 02 வருட அனுபவம் இருக்க வேண்டுமென்பதுடன் தற்போது அவ்வாறான சேவை வழங்கும் நிறுவனமொன்றாக இருத்தல் கட்டாயமாகும்.

4. பாதுகாப்புச் சேவை விடயங்களுக்கு ஈடுபடுத்தும் ஊழியர் குழாம் 18-55 வயதுகளுக்கிடையில் சிறந்த ஆரோக்கியமுடையவராக இருத்தல் வேண்டும்.

5. வடக்கு கிழக்கு மாகாணங்களில் அமைந்துள்ள மாவட்ட அலுவலகங்களுக்கு பாதுகாப்பு அதிகாரிகளை ஈடுபடுத்தும் போது சிங்கள மொழி மற்றும் தமிழ் மொழியைக் கையாளும் ஆற்றலுள்ள நபர்களை ஈடுபடுத்த முடியுமாக இருத்தல் விசேட தகைமையாக கவனத்திற் கொள்ளப்படும்.

6. கேள்விப்படிவங்களை 2026-10-10 முதல் 2026-10-20 வரை (ஞாயிறு, திங்கள் மற்றும் வர்த்தக விடுமுறை தினங்கள் தவிர்த்து) வாரத்தின் ஏனைய நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப.3.00 வரை சங்கத்தின் பிரதான அலுவலகத்தின் 02 ஆம் மாடியில் வழங்கல் பிரிவினால் அல்லது www.edcs.lk எமது வலைத்தளத்திற்கு பிரவேசித்து பெற்றுக்கொள்ள முடியும்.

7. கேள்விக் கட்டணங்களாக ரூ.1000/- உடைய தொகையொன்றை எமது சங்கத்தின் மக்கள் வங்கி கணக்கு இலக்கம் 014-1001-4-0112845 இற்கு வைப்புச் செய்து இந்த பணப் பற்றுச்சீட்டுடன், முழுமைப்படுத்தப்பட்ட கேள்விப்படிவங்களை சங்கத்தின் பிரதம தலைவர் எனக் குறிப்பிட்டு கீழுள்ள முகவரிக்கு 2026-10-29 ஆம் திகதி பி.ப. 12.30 மணிக்கு முன்னர் பதிவுத் தபால் மூலம் அனுப்ப வேண்டும். கேள்விகளை இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''பாதுகாப்புச் சேவைகளுக்கான கேள்வி – 2027'' எனக் குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.

**பிரதம தலைவர்,**
**வ/ப கல்விச் சேவைகள் ஊழியர்களின் கூட்டுறவுச் சிக்கனம் மற்றும் கடன் வழங்கும் சங்கம்,**
**இல. 294, காலி வீதி, கொழும்பு 03.**
**தொலைபேசி – 011 226 6000**